## மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் - 2014

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதன மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2008 சனவரி 25 ஆந் திகதி வெளியிடப்பட்டு1533/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க மோட்டார் வாகனப் புகையைக் கட்டுப்படுத்துவதற்கான கட்டளையின் கீழ் மற்றும் 2009 ஆம் ஆண்டின் 8 ஆம் இலக்க மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறான மோட்டார் வாகன அதிகாரச்சட்டத்தின் (அத்தியாயம் 203) 29(ஆ) பிரிவுடன் சேர்த்துவாசிக்கப்படும் இலங்கை சனநாயகசோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மேற்குறித்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்கத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனதுகணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக் கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவுசெய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வுஉள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன் என நான் நம்புகிறேன்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

**2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

**2.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**2.2.1 இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் (இ.பொ.து.க.நி)**

இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமம் 3 இன் பிரகாரம் கணக்குகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னைய காலப்பகுதிக்குரிய வழுக்கள் சீராக்கங்களுக்குரிய தவறுகளை சீராக்குதல், முன்னைய ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்கள் மீண்டும் திருத்தங்களாக மாற்றி குறிப்பொன்று மூலம் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டிய போதிலும், ரூபா 9,494,637 தொகையான முன்னைய ஆண்டின் ஆண்டின் ஒப்பீட்டு ரீதியான தகவல்களுக்கு மேற்கொண்ட சீராக்கம் திரண்ட நிதியத்திற்கு சீராக்கம் செய்யப்பட்டிருந்த போதிலும், அது தொடர்பாக குறிப்புக்களின் மூலம் தகவல்கள் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டில் கொடுக்கல் வாங்கல்களை பேரேட்டில் பதிவு செய்யும் போது ஏற்பட்ட வழுக்கள் காரணமாக மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 3,136,139 கூட்டுத்தொகையான நிலையான சொத்துக்கள் மூலதனமாக்கப்படுவதற்குப் பதிலாக மீண்டெழும் செலவினக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது. அதனை சீராக்குவதற்கு நாட்குறிப்பு பதிவுகள் மூலம் ரூபா 1,387,015 தொகை மாத்திரம் நிலையான சொத்துக் கணக்கிற்கு வரவு வைக்கப்பட்டு திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. அதனால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 3,136,139 ஆலும் நிலையான சொத்துக்கள் ரூபா 1,749,124 ஆல் குறைவாகவும் திரண்ட நிதியம் ரூபா 1,387,015 ஆல் கூடுதலாகவும் காண்பிக்கப்பட்டிருந்தன.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடன் இணங்காமை**

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்படுகின்றன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் என்பவற்றுடனானதொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| நிதிப் பிரமாணம் 371(2)(ஆ) பிரிவு | பதவிநிலை உத்தியோகத்தரொருவருக்கு செயல் நிமித்த உப கட்டுநிதியாக ரூபா 20,000 |

| | |
|---|---|
| | வழங்கமுடியுமாக இருந்த போதிலும், அந்த எல்லையை மிகைத்து 08 உத்தியோகத்தர்களுக்கு 27 சந்தர்ப்பங்களில் ரூபா 1,166,100 கூட்டுத்தொகையான முற்பணம் வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கையின் 3.2 (ஆ) பந்தி | கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய பணம் மற்றும் ஏனைய பொறுப்புகள் யாவும் தீர்த்து வைக்கப்பட்டதன் பின்னர் எஞ்சும் மேலதிக பணம் தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றுவதற்கும் மிகையான நிதி வெளி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டுள்ள போது அது முதிர்ச்சியடைந்தவுடன் அதனை திரட்டு நிதியத்திற்கு மாற்ற வேண்டிய போதிலும், ரூபா 354,632,751 கூட்டுத் தொகையான திறைசேரி உண்டியல் மற்றும் திறைசேரிப் பிணை முறி தொடர்பாக அதற்கிணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதிமீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவுகள் ரூபா 126,399,391 மிகையாக இருந்ததுடன், அதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 171,131,419 ஆக இருந்தமையால் நிதி விளைவுகளில் ரூபா 44,732,028 ஆன வீழ்ச்சியொன்று அவதானிக்கப்பட்டது. புகை நிலைமை தொடர்பான சர்வதேச மாநாடொன்று கொழும்பில் நடாத்தியமைக்காக ரூபா 36,496,829 தொகை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டமை இவ்வீழ்ச்சிக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் ஒவ்வொரு வாகனங்களினதும் வகுப்பிற்கமைய பதிவு செய்யப்பட்டுள்ள மொத்த வாகனங்களது எண்ணிக்கை 4,800,555 ஆக இருந்ததுடன், மீளாய்வாண்டின் போது புகைப் பரிசோதனைச் சான்றிதழ்களைப் பெற்றுக்கொண்ட வாகனங்களின் எண்ணிக்கை 3,324,262 ஆக இருந்தது. அதன் பிரகாரம் 1,476,293 வாகனங்களுக்காக அதாவது மொத்த வாகனங்களில் 31 சதவீதத்திற்காக புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்படாதிருந்ததுடன், போலியான புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டோ அல்லது புகைப் பரிசோதனைச் சான்றிதழ் பெற்றுக்கொள்ளாத வாகனங்கள் காணப்படுகின்றதா என இனங்காண்பதற்காக நிதியத்தினால் முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்திறமையின்மை

புகைப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பான விளம்பர நிகழ்ச்சித்திட்டங்கள் தயாரித்து, பொதுமக்களை அறிவூட்டுவதற்காக 2012 ஆம் ஆண்டின் போது விலை விபரங்கள் கோரப்பட்டு கம்பனியொன்று தெரிவு செய்யப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் போது மீண்டும் விலை கோராமல் அக்கம்பனி தெரிவு செய்யப்பட்டு விளம்பர நடவடிக்கைகளுக்காக நிதியத்தினால் ரூபா 9,684,741 தொகை செலவிடப்பட்டிருந்தது. 2013 ஒக்தோபர் 15 ஆந் திகதி நிதியத்தினால் அக்கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், உடன்படிக்கையில் உடன்படிக்கை செய்யப்பட்ட காலம் குறிப்பிடப்படாதிருந்ததுடன், விளம்பர ஊடகங்கள், அவற்றின் மாதிரிகள் மற்றும் விலை

விபரங்கள் போன்ற விடயங்கள் உடன்படிக்கையில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**4.3 செயற்பாட்டு செயற்திறமையின்மை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சுற்றாடல் மாசடைவதற்கு ஏதுவான வாகனங்களது புகையைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் புகைப்பரிசோதனை நிதியம் செயற்பட்ட போதும், அதன் நோக்கம் போதியளவு நிறைவேறியதா, இல்லையா என்பதை உறுதிசெய்வதற்கு புகைப் பரிசோதனை நிகழ்ச்சித்திட்டத்தை அமுலாக்குவதற்கு முன்பிருந்த நிலைமை மற்றும் அமுலாகியதன் பின்னரான நிலைமை என்பன தொடர்பாக ஒப்பிட்டு பார்க்க கூடியதான சுற்றாடல் தரவு அடிப்படையில் முறையான மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) புகைப் பரிசோதனை நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆரம்பிக்கப்பட்ட 2008 நவம்பர் 17 ஆந் திகதி முதல் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியின் போது இரண்டு தனியார் கம்பனிகளால் அறவிடப்பட்ட புகைப் பரிசோதனைக் கட்டணத்தில் 10 சதவீதம் நிதியத்திற்கு வழங்கப்பட வேண்டும். அதன் பிரகாரம் ரூபா 695,679,989 தொகை நிதியத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதும், இரு கம்பனிகளாலும் பரீசீலனைக்குள்ளான சகல மோட்டார் வாகனங்களுக்குரிய புகைப் பரிசோதனைக் கட்டண அறவீடுகளில் நிதியத்தின் பங்கு சரிவர அனுப்பி வைக்கப்பட்டதா இல்லலையா என்பதை உறுதி செய்வதற்கு நிதியத்தில் குறிப்பாக எதுவித நடைமுறைகளும் செயற்படுத்தப்படவில்லை.

**5. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலான குறைபாடுகள் அவ்வப்போது மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஆ) உள்ளகக் கட்டுப்பாடு
(இ) கணக்கீடு